Regd. No. M. 4593. KUDI ARASU 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.
சனி வெளியீடு.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0 }

மாலை 19 } ஈரோடு 2-2-1946 தை மீ 20உ { மலர் 17

## திராவிட கழகத் தலைவர்

# பெரியார் ஈ. வெ. இராமசாமி

## — அவர்களுக்கு —

திருநெல்வேலி நகர பரிபாலன சபையார்

26—1—'46 சனி அன்று நகர மன்றிலே வரவேற்று அன்புடன் அளித்த

# வாழ்த்து

★

அன்பார்ந்த ஐயா,

தங்களை வரவேற்கும்பேறு திருநெல்வேலி நகர பரிபாலன சபையாராகிய எங்களுக்கு இன்று கிடைத்து, தங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழ்நாட்டுக்குத் தாங்கள் ஆற்றி வரும் மகத்தான தொண்டினை இந்த நகர மக்களுடன் நாங்களும் கவனித்து வருகிறோம். பெரிய குடும்பத்திலே பிறந்தீர்கள். பிறந்த ஊரிலேயே நகரசபைத் தலைவராய் சில ஆண்டுகள் அமர்ந்து அரிய செயல்கள் புகழுடன் புரிந்தீர்கள். ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஏற்படுத்தியதைத் தீவிரமாக எதிர்த்து தமிழின் புனிதத்தன்மையைக் காக்க சிறைசென்றும் அரும் பெருந் தொண்டாற்றினீர்கள். சீர்திருத்த வாதியாய், தமிழுலகு ஒன்றுபட்டு ஓங்க உழைக்கின்றீர்கள். வைக்கம் வீரராய்த் தீண்டாமையை ஒழிக்க முயன்றீர்கள். இந்த முதுமையிலும் தன்நம்பிக்கை, தன்மதிப்புடன் தலைநிமிர்ந்து நடக்கும் சுதந்திரம் தமிழர் அடைய நாடுதோறும் சென்று உழைக்கின்றீர்கள். இன்று எங்களிடையே வீற்றிருக்கின்றீர்கள். தங்களைப் பாராட்டுகின்றோம்.

போற்றலையும் தூற்றலையும் பொருட்படுத்தாது, இன்னல் இடையூறுகளுக்கும் அஞ்சாது தங்கள் கொள்கையைக் கொண்டு செலுத்தும் நெஞ்சுரனையையும், பெருமையையும் நினைந்தே தமிழகம் தங்களை ஒருமுகமாகப் "பெரியார்" என்று கொண்டாடுகிறது.

செயற்கரிய செய்த பெரியீர்!

தாங்கள் வாழ்க. தமிழகத்திலே அடிமை, பட்டினி, பிணி—இல்லாத ஒரு கற்பனை உலகைக் காண விரும்புகிறீர்கள். தங்கள் கனவு நனவாகுக! தாங்கள் நீடூழி வாழ்க. இதுவே எங்கள் பிரார்த்தனை.

தங்கள் அன்பார்ந்த
தலைவர், அங்கத்தினர்கள்
திருநெல்வேலி நகர சபை.

திருநெல்வேலி }
26-1-'46 }

# வெள்ளையன் ஆட்சியை வெறுத்து மார்வாரி ஆட்சிக்கு மகிழ்வதா?

[26, 27-1-46ல் திருநெல்வேலியில் நடைபெற்ற நெல்லை மாவட்ட 3-வது திராவிடர் கழக மாநாட்டில் தோழர் எ. வி. முத்தையா அவர்கள் ஆற்றிய வரவேற்புரை]

★

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களே! தாய்மார்களே! தலைவர் அவர்களே! தோழர்களே!

தேசியப் போர்வை போர்த்தி, வந்தே மாதரம் ஜெபித்து, தக்ளி ஏந்தி, கதரணிந்து தேசபக்தர் என்று திரியும் ஒரு கூட்டம் பஜாஜி, டாடா, போன்ற குபேரர்கள் மேலும் மேலும் கொழுக்க, நமது சுடலைமுத்து, சொள்ளமுத்து, சோணமுத்துக்களுடைய இரத்தத்தை உறுஞ்சுகின்றது. வேறொரு கூட்டம், பகதூர்களாகவும், சர்களாகவும் பதவி பட்டங்களில் வேட்கை கொண்டு வேட்டையாடி வெள்ளையர் புகழ்பாடி வீற்றிருக்கிறது: மேலும் ஒரு கூட்டம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய வேதங்களை விளம்பிப் புராணங்களைப் புகழ்ந்து பொய்மையும், புலைமையும் போற்றி, அகண்ட இந்துஸ்தான் ஆரவாரம் செய்கிறது. மற்றொரு கூட்டம், மாஸ்கோவைச் சுட்டுகிறது. இவற்றுக்கிடையில் வெள்ளையனோ வேடிக்கை பார்த்து இந்த விநோதங்களை உலகிற்கு விளம்பரம் செய்கிறான். வெட்கக்கேடே இது. பெரிய அரசியல் கட்சிகள் என்று பேசி அதிகாரத்தில் யாருக்கு என்ன பங்கு என்று தங்களுக்குள் பேரம் பேசுகிறது. தம் தம் சக்தியைக் காட்டத் தேர்தல் நடத்துகிறது. வெற்றி வெறி பேரமோ பேச்சில் முடியப்போவதில்லை நிச்சயமாய் சண்டையும் சச்சரவுமேதான் னனை நாம் காணக்கிடக்கும் கோலம். இந்தக் கலவரத்திலே நமது பங்கு என்ன? நாம் ஒதுங்கி ஓடுவோமா? வேறு பூசலை விளக்கப்போகின்றோமா? தோழர்களே! உங்கள் விடை என்ன? ஒதுங்கமாட்டோம், ஓடமாட்டோம் வெள்ளம்போல் தமிழர் கூட்டம்—வீரம் கொள் கூட்டம் நாம் வாழும் இந்த நாடு—தமிழ் நாடு நம்முடைய நாடு. தமிழகம் நமக்குத் தாயகம்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம் மூதாதையர் வாழ்ந்த நாடு, இதை இதன் மக்கள் ஆள வேண்டாமா? வெள்ளையன் ஆட்சியை வெறுக்கின்றோம் ஆனால் மார்வாரி ஆட்சிக்கு மகிழ்கின்றோம். செங்குட்டுவன் திக் விஜயம் செய்து திராவிடர் ஆற்றலைத் திசை எங்கும் பரப்பினான். ஆனால் அவனாண்ட செந்தமிழ் நாட்டை இன்று வெள்[illegible]ங்கி விலகி[illegible] வேறொரு குஜராத்திக்கு அடிமைப்படுத்துவது விபரீத புத்தியே. கங்கையை வென்று இமயத்து ஏறி, தமிழ்க்கொடி நாட்டி மீண்ட கரிகாலனுடைய காவிரிக்கரையில் காஷ்மீர் அதிகாரம் செலுத்துவதா? ஜாவா, சிங்களம் முதலிய தீவுகளிலும் மலேயா, இந்து சீனம் முதலிய தேசங்களிலும் மீன்கொடி பறக்கவிட்ட பாண்டியர் தாம்பரவர்ணியை, வட ஆரியர்க்கடிமையாக்குவதா? நம்மை நாம் ஆளவேண்டும்: நமது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் நாமே பொறுப்பாளி. நமது வாழ்வை நாமே வகுப்போம். நமது வாழ்விலே மற்றவர் தலையிடுவதா? நமது கலை நாகரீகங்கள் பழமையானது பண்பட்டது. நமது மொழி தொன்மையானது, தூய்மையானது. இவை வளர வேண்டும், இவற்றுடன் நம் உயிர் பிணைக்கப்பட்டிருக்கிறது. இவை வளர நாம் வளர்வோம், நாடும் வளரும், அதற்கு நம் ஆட்சி வேண்டும்.

பல்வேறு ஜாதிகளால் சின்னா பின்னப்பட்டுச் சிதறிக்கிடக்கும் தமிழர் சமுதாயத்தை ஒன்று படுத்தும் முயற்சியைக் கழிந்த கால் நூற்றாண்டுகளாக நமது கட்சிதான் செய்து வந்திருக்கிறது.

ஆலயப்பிரவேசமென்று ஆயிரத்தெட்டு வக்கணை பேசுகிறது தேசியம். ஆனால் ஆட்சியில் அவர்களுக்குள்ள பங்கை மறுக்கிறது அவர்களை சட்டத்தில் சமுதாயத்தில் ஜாதியில் தாழ்த்துகிறது. பொருள் நிலையில் தாழ்த்துகிறது. அக்கிரகாரத்தில் பார்ப்பனர் அல்லாதார் குடி இருக்க சம்மதியாத தேசபக்தர் தென்னாப்பிரிக்காவிலே வெள்ளையன் தன் வீதியில் இந்தியனை விடுவதில்லை என்று சீறுகிறார். இதுவேதான் நாம் நாள் தோறும் காணும் தேசியம்.

தமிழர் சமுதாயத்தை ஒற்றுமைப் படுத்த நாம் செய்வித்த கலப்பு மணங்கள் எத்தனையோ உண்டு. ஜாதி பேதங்களைத் தகர்ப்பதற்கு நாம் கையாண்ட முறைகளும் எத்தனையோ உண்டு. தோழர்களே! பழங்கதைகள் பேசி பொழுதைப் போக்கவேண்டாம். பாலிய மணத்தை ஒழிப்போம், கைம்மை மணத்தை ஆதரிப்போம், கலப்பு மணத்தைக் கைக்கொள்வோம், காதல் மணத்தைப் போற்றுவோம், கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போவதாக. ஒன்றே குலமும் ஒருவனே தெய்வ[illegible] என்பது நமது பண்டையோர்கண்ட நெறி. இந்த நெறியிலே சென்று முப்பத்துமுக்கோடி தேவர்களை அவர்களுக்குரிய அபிஷேக ஆராதனைகளை வெறுப்போம். அன்பே சிவம். எவ்வுயிர்க்கும் அன்பாயிருப்போம். இதுவே நம் கடவுள் வழிபாடு.

வடநாடு குபேர நாடு ஆவதற்குத் திராவிடன் உழைத்து உழைத்து ஓய்கின்றான், உயிர்மாய்கின்றான். இவன் உழைப்பிலே வட ஆரியன் வாழ வகை தேடுவதற்குத்தான் வெள்ளையனை விரட்டு என்ற கூச்சல். டில்லி சலோ என்ற வீச்சு. இந்த வெற்று ஆரவாரங்களுக்கு மயங்கிவிட்டோம். வெறும் மூலப்பொருள்களையே விளைவித்து பம்பாய் மில்களுக்கு அனுப்போம். ஆடைமில்கள் ஆமதாபாத்தில், ஆனால் தமிழன் கையில் தக்ளி. இதுவே தேசியப் பொருளாதாரத்திட்டம். இது ஒரு சுயநல நச்சுப்பொய்கை. கைத் தொழிலிலே இனி நாம் முன்னேறுவோம். நமது மூலப்பொருள்களை நாமே செய்பொருள்களாக்குவோம். செல்வம் திரட்டுவோம். இந்துமகா சமுத்திர ஆட்சி செந்தமிழ் நாட்டிற்கே. தமிழ்நாடு தமிழனுக்கே. அன்னியனுக்கு இங்கு இடமில்லை. வெள்ளையன் அன்னியன், அவனை விரட்டுவோம், வட ஆரியனும் நமக்கு அன்னியன், அவனையும் விரட்ட வேண்டாமா?

தோழர்களே! விழித்தெழுங்கள் நமது இந்த முயற்சியில் வெற்றியில்லையேல் சாவு. சாவதற்குத் தமிழன் அஞ்சான். தமிழ்த்தாயின் அடிமைச் சங்கிலியைத் தவிர்க்க இதுவே தருணம். சந்தர்ப்பம் அறைகூவி அழைக்கின்றது. நமது பின் சந்ததியார் மானத்தோடு வாழ, மரியாதையோடு நடமாட, சுதந்திரமாய் வாழ நமது உடல், பொருள், ஆவிகளைத்தமிழ் நாட்டின் விடுதலைக்காக ஈடுசெய்வோம்.

வாழ்க தமிழ், வாழ்க திராவிடம்.

---

## பெயர் மாற்றம்

23-12-45ல் தோழர் வா. அ. மு. வெள்ளையப்பன் தலைமையில் நடந்த விருதுநகர் தெ. ந. உ. ச. கூட்டத்தில் சேலம், திருச்சி மாநாட்டுத் தீர்மானப்படி "திராவிடர் கழகம்" எனப் பெயர் மாற்றப்பட்டது. தோழர்கள் ர. பாஸ்கர், இரா. பாண்டியன், ஆலசத்தம்பி, ராஜாமணி முதலியோர் பேசினர். தோழர் வெள்ளையப்பனைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. கூட்டம் தெ. இ. ந. உ. ச. காரியதரிசி ஆதியப்பன் அவர்களால் கூட்டப்பட்டது.

0 0

சேலம் அரிசிபாளையம் தோழர் கே. வி. ரங்கசாமி தமது பெயரை கே. வி. ஸ்டாலின் என மாற்றியுள்ளார்.

# தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் யாவும் ஒரே மொழியே தனித்தனி மொழியல்ல.

## பெரியாரின் ஆராய்ச்சி உரை

★

(26, 27-1-46ல் நடைபெற்ற நெல்லை மாவட்ட 3-வது திராவிடர் கழக மாநாட்டின் திறப்புரை:)

தலைவரவர்களே! தோழர்களே!

திருநெல்வேலி ஜில்லா 3-வது திராவிடர்கழக மாநாடு திறப்புவிழா ஆற்றுவதன் மூலம் ஏதாவது சில வார்த்தைகள் என்னிடமிருந்து எதிர்பார்ப்பீர்கள். திராவிடக் கழகம் என்று சொல்லப்படுவதன் மூலம், அதன் காரணம், கொள்கை முதலியவைகளைப்பற்றி முதலில் சொல்லுகிறேன்.

திராவிடம் என்பது, நம்முடைய நாட்டினுடைய பெயராகும். திராவிடர் என்பது, இந்நாட்டில் உள்ள பழங்குடி மக்களது இனத்துக்கு ஏற்பட்ட உலகப் பெயராகும். திராவிடர் கழகம் என்பது, இந்நாட்டுமக்களின் நலத்திற்காக அமைத்துக் கொண்ட ஒரு ஸ்தாபனத்தின் பெயராகும். இக்கழகம் இரண்டாண்டுகளுக்கு முன்பு, தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்னும் பெயரால் சுமார் 20 ஆண்டுகள் இருந்து வந்தது. எந்த முக்கிய காரியத்திற்கும், கருத்திற்குமாக இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டதோ, அந்தக் காரியத்தைப் பற்றிய சரியான உணர்ச்சி, நம்முடைய மக்களுக்கு ஏற்படவில்லை. ஏதோ சில காரியங்கள் நமக்கு ஏற்பட்டிருந்தாலும், அவை, முயற்சிக்கேற்ற பலனாக இல்லாததால், இப்போது சற்று தீவிரமான காரியங்களைச் செய்யவும், மக்களுக்குள் ஒற்றுமையும், உணர்ச்சியும், தொண்டாற்றும் தூண்டுதலும், ஏற்படவேண்டும்என்பதற்காகவே,நம் கழகத்தின் உண்மைத் தத்துவத்தோடும், வெளிவரக் கருதி, இப்பெயரைத் திராவிடர் கழகம் என்று மாற்றியமைத்து முன் வந்திருக்கிறோம். இனித்தான் நாம் செய்யவேண்டிய வேலைகள் அதிகமாக இருக்கின்றன.

மற்ற நாடுகள் எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறதோ அந்த அளவில் நாம் நூற்றிலொருபங்கும்முன்னேற்றமடையவில்லை. நமதுஉணர்ச்சிகள் தேவையான அளவு ஏற்பட்டதாக இல்லை. இந்த அதிசய, அற்புத, விஞ்ஞான காலத்தில் சாதாரண மனிதர்களும், உயர்ந்த கருத்தையும், லட்சியத்தையும் பற்றி தாராளமாகப் பேசிக்கொள்ளப்படுங் காலத்தில், நம் சமுதாயத்தின் இழிவான பெயர்களும், சாராசரி மனிதத்தன்மைக்குக் கூடத் தகுதியற்ற நிலைமையும், மதத்தின் பேரால் மடமையும் காட்டுமிராண்டித் தன்மையும் நமக்கு இருந்து வருகிறது என்றால் நம் நிலைமையைப்பற்றி சிந்தியுங்கள்.

இவைகளையெல்லாம்விட நமக்குள் ஒரு ஒற்றுமையும், கட்டுப்பாடும், இல்லாமல் பலவகையாய்ப் பிரிந்து, நம்முள் போராடிக் கொண்டிருப்பதல்லமால், நம் எதிரிகளுக்கு அடிமையாவதற்குப் போட்டி போட்டுக் கொண்டுமிருக்கிறோம்.

இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய நாம் யாவரும் ஒன்று, என்று சொல்லிக் கொள்ள வகையற்றவர்களாக இருக்கிறோம். இந்த நாட்டில் இமயம் முதல் கன்னியாகுமரி வரை பல இடங்களில் பல தன்மைகளோடு, ஒருவர்க்கொருவர் சம்மந்தமில்லாது இருந்துவரும் பார்ப்பனர், தங்களுக்கென்று ஒரு நாட்டுப் பற்று இல்லாவிட்டாலும். தாங்கள் யாவரையும், சரிநிகர் சமானமான சமுதாயத்தார் என்று சொல்லிக்கொள்ள வசதியும், தகுதியும் உடையவர்களாய் இருக்கின்றார்கள்:

இந்த உலகத்தில் பல்வேறு பாகங்களில் வாழ்ந்துவரும், பல்வேறு இன, வகுப்பு, ஆச்சார அனுஷ்டானம், உள்ள மக்களாக இருந்துவரும் உலக முஸ்லீம்கள் யாவரும், தாங்கள் ஒன்று என்றும், சரிநிகர் சமானமான சமுதாயத்தவர்கள் என்றும், சொல்லிக்கொள்ள தகுதியுடையவர்களாகி ஒரு வலிவுள்ள, ஒற்றுமை, கட்டுப்பாடுள்ள சமுதாயமாக, மற்றவர்கள் பார்த்து அஞ்சும்படியானவர்களாக இருந்து வருகிறார்கள்.

நாம் உண்மையிலேயே ஒரு நாட்டவர், ஒரு இனத்தவர். ஒரு குறிப்பிட்ட எல்லையில், ஒரே பழக்கவழக்கங்களோடு இருக்கிறவர்கள். ஒரு காலத்தில் இந்நாட்டை ஆண்டவர்கள். வெகுநாளாக இருந்து வருபவர்கள், இன்னும் வெகுநாளைக்கு எப்போதும் இங்கேயே இருக்கவேண்டியவர்கள். நாம் யாவரும் ஒன்று, நாம் யாவரும் சரிநிகர் சமமானவர்கள், என்று சொல்லுவதற்குத் தகுதியில்லாத நிலைமையில் சின்னாபின்னப் பட்டுக் கிடக்கிறோம்.

திராவிடர்கள் கேவலம், மொழிப்பிரிவைக் கொண்டு, வேறு வேறாகக் கருதிக் கொண்டு, திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்ளவே சம்மதிக்க முடியாதவர்களாக இருக்கிறோம். திராவிடர்கள் அர்த்தமில்லாததும், அன்னியனுக்கு அனுகூலமானதும் ஆன, பலவகுப்புப் பெயர்களைச் சொல்லிக் கொண்டு, ஒருவரை ஒருவர் வேறுபடுத்தி, இகழ்ந்து பேசிக் கொண்டு, சிறு சிறு கூட்டத்தினர்களாக இருந்து வருகிறோம். இப்படி ஏன் இருக்கவேண்டும்? உண்மையில் திராவிட மொழியில் பிரிவினை இருக்கின்றதா? திராவிட மொழியில் கிளைகள் இருக்கின்றனவா? திராவிட மொழிகள் என்று சொல்லப்படும், தமிழ், தெலுங்கு, லையாளம், கன்னடம் என்பவைகள் பிரித்துக் கொள்ளப்பட்ட, பிரிக்கப்பட்ட மொழிகளேயல்லாமல் கிளை மொழிகளல்ல.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், என்பவை தமிழேயாகும். மலையாள பாகத்தில் பேசும் தமிழ், மலையாளமாகச் சொல்லப்படுகிறது. கர்நாடக பாகத்தில் பேசும் தமிழ், கன்னடமாக ஆய்விட்டது. ஆந்திர பாகத்தில் பேசும் தமிழ், தெலுங்காக ஆய்விட்டது. நால்வர்களும் பேசுவது தமிழ் மொழிதான். நான்கு பாகத்திற்கும் போக்குவரவு சாதனங்களும், அடிக்கடி சந்தித்து அளவளாவும் சந்தர்ப்பங்களும், முன்காலத்தில் வசதியாய் இல்லாததால், ஆங்காங்குள்ளவர்கள் தமிழைப் பேசிவந்த முறை, ஒன்றுக் கொன்று சிறிது வேறுபடவும், அதைத் திராவிடரல்லாத மக்கள் பிரவேசித்து, வேறுபடுத்தித் தங்கள் மொழிகளையும் புகுத்தி அதற்கேற்றவண்ணம் எழுத்து இலக்கணம் முதலியவற்றை உண்டாக்கிக்கொடுத்து, சிறிது வேறு உச்சரிப்பாக இருந்ததமிழைத், தனித்தனிமொழிஎன்று சொல்லவேண்டியதாக ஆனதோடு, தமிழ் மக்கள் தங்களுக்குள் இருக்கும், வகுப்பு பேதத்தால், இக்குறைபாட்டைப்பற்றிச் சிந்திக்காமல், இதன் உட்காரணத்தையும் கண்டுபிடியாமல், தமிழ்நாட்டிலுள்ள தமிழைத்தவிர மற்றமொழிகள் கிளை மொழிகளென்றும், தமிழில் இருந்து தோன்றிய மொழிகளென்றும், நாட்டுப் பெயரையே மொழிக்குக் கொடுத்துப் பிரித்து வைத்துவிட்டார்கள்.

ஒன்று, நான்காக வகுக்கப்பட்டது என்பதற்கும், ஒன்றிலிருந்து, நான்கு பிறந்தன, கிளைத்தன என்பதற்கும், பேதம் உண்டு ஆகவே தமிழ் நீண்ட சம்மந்தமற்ற காரணத்தால் நான்காகப் பிரிந்திருக்கிறதேயல்லாமல் தமிழிலிருந்து, தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பவை தோன்றியவை அல்ல, உண்டாக்கப்பட்டவை அல்ல, என்று திராவிடர் உணரவேண்டும்.

இந்த உண்மை தெரிந்துகொண்டாலொழிய, இந்த நான்கு நாட்டாருக்குள்ளும், வேற்றுமையுணர்வு தோன்றாமல் இருக்காது. இந்த நான்கும், தமிழ் மொழியே

தான் என்பதற்கும், சிறிதும் சந்தேகமே இல்லை. உதாரணமாக நான்கு மொழிப் பண்டிதர்களும் ஒன்றுசேர்ந்து, நான்கு மொழி அகராதிகளையும் வைத்துக் கொண்டு, வடமொழி ஆரியனல்லாத ஒருவரை நீதிபதியாய்வைத்து தமிழ் தவிர்த்த மற்ற மூன்று அகராதிகளிலுள்ள வடமொழிகளையும், பிற, அதாவது திராவிடநாடல்லாத மற்ற நாட்டுமொழிகளையும், ஒதுக்கிவிட்டு, மீதியுள்ள மொழிகளை எடுத்து ஒரு மொழி அகராதியாகத் தொகுப்போமேயானால், நூற்றுக்கு எண்பது இன்றைய வழக்கத் தமிழ்ச் சொற்களாகவும், பத்து; மறைந்த தமிழ்ச் சொற்களாகவும்,பத்து; தற்போது வழக்கத்திலில்லாமல், நம் பழங் காவியங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றுள் இருந்துவந்த சொற்களாகவுந்தான் இருக்கும்.

இதை மெய்ப்பிக்க நாம் யாரிடத்திலும் பந்தயம்கட்டலாம். உதாரணமாகத் தமிழ் நாட்டிலேயே தமிழ் ஜில்லாக்கள் பன்னிரண்டில் ஒரு பொருளுக்கு, ஒரு ஜில்லாவில் இருக்கும் சொல், மற்றொரு ஜில்லாவில் இல்லை. அதுமாத்திரம் அல்லாமல், ஒரு ஜில்லாவில் ஒரு பொருளுக்குப் பயன்படுத்தும் சொல்லை, மற்றொரு ஜில்லாவில் வேறு பொருளுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒரே ஜில்லாவில் வேறுவேறு ஒலியாக உச்சரிக்கிறார்கள். இதைப் பண்டித உணர்ச்சியை விட்டுவிட்டுப், பாமரமக்கள் தன்மையில் கலந்து பார்த்தால் நன்றாக விளங்கும். தமிழ் நாட்டுத் தமிழுக்கும், மலையாளத்தில் பேசப்படும் மொழிக்கும் உள்ள பேத உச்சரிப்பைவிடத் தமிழ்நாட்டிலேயே, ஆரியர்கள் பேசும் தமிழுக்குள்ளபேதம் அதிகமென்றே சொல்லலாம்.

இந்த ஆரியர்கள் தனியாக நமக்கும் அவர்களுக்கும் போக்குவரவு சம்மந்தமற்ற ஒரு இடத்திலிருந்து கொண்டு பேசுவார்களேயானால், அது மலையாளம், தெலுங்கைவிட வெகுதூரம் வேறுபட்ட மொழியென்றே சொல்லவேண்டியிருக்கும். உதாரணமாக எனக்கு என்கின்ற வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு என்பது தமிழ்; எனிக்கி என்பது மலையாளம், நாக்கு என்பது தெலுங்கு, நேக்கு என்பது ஆரியர் பேசும் தமிழ். அதைப்போலவே உனக்கு என்பது தமிழ், நீக்கு என்பது தெலுங்கு, நோக்கு என்பது ஆரியத் தமிழ், "அவாள்" மற்றொன்று "அவர்கள்" என்பதற்குப் பதிலாகத் தமிழில் சாதாரணச் சொல்லாய் அவாள், அவர், என்கின்றோம். தெலுங்கர், வாள்ளு, வாரு, என்கிறார்கள், கன்னடியர் அவுரு பார்ப்பனர் அவா, இவா வந்தா, போனா என்று மொண்ணையாகவே, மொக்கையாகவே, பேசுகிறார்கள். நம்மிற்பலரும் அதைப் பெருமையாக நினைத்து அந்த மாதிரியே பேசி வருகிறார்கள். இப்படிப் பல ஆயிரக்கணக்கான வார்த்தைகளை எடுத்துக் காட்டலாம். கொல்லை என்கின்ற சொல், தமிழ் நாட்டில் சில இடங்களில், கக்கூசுக்குப் பயன்படுகிறது. சில இடங்களில் வீட்டின் பின் வாசலுக்குப் பயன்படுகிறது. சில இடத்தில் விவசாய நிலத்திற்குப் பயன் படுகிறது. அதுபோலவே, தோட்டம், என்கின்ற சொல், சில இடத்தில் கக்கூசுக்கும், சில இடத்தில் விவசாய நிலத்திற்கும் பயன்படுகிறது.

தமிழ் நாட்டில்,கோவை ஜில்லாவில், சாதாரணமக்கள் பேச்சு, கிராமமக்களால் சுலபத்தில் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குப் பேதம் இருந்துவருகிறது. மற்றும், ஒரு பொருளுக்குத் தமிழில் உள்ள பல சொற்களே, ஒவ்வொரு நாட்டில், தனித்தனியாக வழங்கி வேறு மொழியாக நிற்கிறது. உதாரணமாக வீடு என்ற சொல்லுக்குத் தமிழில்,மனை,இல், அகம், அறை, வளைவு என்றிருக்கிறது. தமிழர் வீடு என்பார்கள், தெலுங்கர் இல் என்பார்கள், கன்னடியர் மனை என்பார்கள், மலையாளத்தில் அறை, பொறை என்பார்கள், ஆரியர் அகம் என்பார்கள். இப்படியாக ஒரு பொருளுக்குள்ள பல சொல்லைப், பல இடங்களில், பல மாதிரியாகப் பேசுகிறார்கள். தண்ணீருக்கு நீர், வெள்ளம், சலம் என்கின்ற வார்த்தைகள் இருக்கின்றன. அதைக் கன்னடியர் நீரு என்கின்றனர், தெலுங்கர் நீள்ளு என்கின்றனர், மலையாளத்தார் வெள்ளம் என்கின்றனர். பார்ப்பனர் தூத்தம், ஜலம் என்கின்றனர். இப்படியாக ஒரே சொல்லுக்குப் பல பொருளுள்ளவைகளைப் பலர் பல இடங்களில் பல மாறுபாடோடு உபயோகிக்கிறார்களென்பதைத் தவிர, கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் என்ற மொழிகள், வேறு மொழிகளுமல்ல, கிளை மொழிகளுமல்ல. ஆரியர்கள் தெலுங்கு, கன்னடம், மலையாளத்தைத் தங்களுக்கு அனுகூலமாய்ப் பயன்படுத்தி, அந்த மக்களை ஏய்த்து வசப்படுத்தித் தங்கள் சொற்களைப் புகுத்தியதோடல்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

நமது நகைச்சுவை அரசு தோழர் என். எஸ். கே. அவர்கள் அடைந்துள்ள
இன்றைய எதிர்பாராத சிறைவாசம் ஒவ்வொருவருடைய
கல் மனதையும் கதிகலங்கச் செய்துவிட்டது

மீண்டும், நமது முன்னணியில் என். எஸ். கே. தோற்றமளிக்க
எங்கும் விடுதலை முயற்சி நடைபெற்று வருகிறது. வெற்றி பெரும்
என்பதே எங்கள் ஆறுதலான எண்ணமும், முடிவும்.

பல தோழர்கள் வேண்டியதற்கிணங்க

தோழர் N. S. கிருஷ்ணன்

அவர்களுடைய உருவமைந்த படத்தை
வெண்மையான ஆர்ட் கார்டில் வெளியிட்டுள்ளோம்.
ஒன்றின் விலை 0-2-0. மாதிரி பெற 0-2-9. பில்லைகள் அனுப்புக:
சொற்ப படங்களே வெளிவந்துள்ளது.

விபரங்கட்கு:-
திராவிடன் பதிப்பகம், P. B. 18, வேலூர். வ.ஆ.

ரோஜா முத்தையா

## நடக்க இருப்பவை

★6-2-46 காலை 9மணிக்குச் சென்னை ராயபுரம் மணிகார் சௌல்ட்ரி ரோட் நெ. 6-வது இல்லத்தில் தோழர் எம். கே. நடராசனுக்கும், தோழியர் மீனாட்சிசுந்தரம் அம்மையாருக்கும் தோழர் டி. சண்முகம் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். தோழர்கள் டாக்டர் எ. கிருஷ்ணசாமி எஸ். குருசாமி, கே. அன்பழகன், சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவார்கள்.

★4-2-46 காலை 7மணிக்குத் திண்டுக்கல் மெயின்ரோடு சி. ப. சந்திரன் பலசரக்கு மளிகைக்கு அருகில் பகுத்தறிவு நூல் நிலைய ஆரம்பவிழா நடைபெறும். யாவரும் இதையே அழைப்பாகக் கொண்டு வரும்படித் தோழர் சந்திரன் அறிவிக்கிறார்.

★10-2-46 காலை 9-மணிக்கு திருவாரூரில் திராவிட மாணவர் கழக 3வது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெறும். அதுபோழ்து ஈ. வெ. கி. சம்பத், மதுரை சத்தியேந்திரன், அன்பழகன், தவமணிராசன், கருணாநிதி ஆகியோர் வருகை தருவார்கள் என செயலாளர் தே. வெங்கடாசலம் அறிவிக்கிறார்.

★6-2-46 மாலை 5-மணிக்கு சாத்தூர் இந்து நாடார்கள் எட்வர்ட் உயர்நிலைப் பள்ளியின் புதுக் கட்டிடத் திறப்புவிழா தோழர் எஸ். சிவசுப்ரமண்ய நாடார். பி. ஏ. பி. எல். தலைமையில் நடைபெறும்.

★7-2-46 காலை 9½-மணிக்கு நாகைப்பிடாரி கோவில் சந்து எஸ். 1022 நெ இல்லத்தில் தோழர். டி. கே. விஜயராகவனு, பி. ஏ. பி. எல். தலைமையில் தோழர் பக்கிரிசாமிக்கும்-தோழியர் இந்திராணிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும்.

### தென் சென்னை திராவிடர் கழக முதல் மாநாடு

10-2-46 ஞாயிறு காலை 8 மணி முதல் பகல் 1 மணி வரை மயிலாப்பூர் கபாலி டாக்கீஸ் மண்டபத்தில் தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் நடைபெறும் தோழர்கள் எஸ். பெருமாள் பி. ஏ., சத்தியவாணிமுத்து, பெரியார் ஈ. வெ. ரா, தளபதி சி. என். அண்ணாத்துரை முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாலை 4 மணி முதல் 5 மணி வரை கறுப்புச் சட்டைப்படை ஊர்வலம் நடைபெறும். மாலை 5 மணிக்கு மயிலாப்பூர் நொச்சிக்குப்பத்துக் கடுத்த கடற்கரையில் (ஐ. ஜி. போலீஸ் ஆபீசுக்கு எதிரில்) தோழர் என். சொக்கலிங்கம் எம். எ. எம். இசட். தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். பெரியார், சி. என். எ. இருவரும் பேசுவார்கள் ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

தோழர் எம். கே. தங்கவேல்
வரவேற்புத் தலைவர்

குறிப்பு:- கறுப்புச் சட்டைப் படை ஊர்வலம் மாலை 4-மணிக்கு மயிலாப்பூர் மந்தைவெளித் தெருவில் இருந்து புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று மயிலாப்பூர் கடற்கரையை அடையும். ஊர்வலத்தில் கலந்து கொள்ளுபவர்கள் கருப்புச் சட்டையுடனாவது, கறுப்பு மேல் வேஷ்டியுடனாவது வரவும். இரண்டும் இல்லையானால் சாதாரணமாய்க் கலந்து கொள்ளவும். ஊர்வலத்தில் கலந்து கொள்வோர் அரைமணிக்கு முன்பே (நெ, 4, செயின்ட் மேரி தெரு, மந்தைவெளி, மயிலாப்பூர்) வந்து சேரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சரியாக 4-மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும். கறுப்புச் சட்டை வேண்டியவர்களுக்கு அங்கு கிடைக்கலாம்.

### மாணவர் மாகாண மாநாடு

9-10-2-46ல் நீடாமங்கலத்தில் நடக்க இருந்த திராவிட மாணவர் மாகாண மாநாடு பல தலைவர்கள் சௌகரியங்களை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டது. விவரமான அறிக்கை நாள் குறித்து அடுத்த கிழமை வெளியிடப்படுமென செயலாளர்கள் இரா. இளம்வழுதி, எஸ். சரவணன் பி. எ. ஆகியோர் தெரிவிக்கிறார்கள்;

### மலேயாவில் லீக் தேர்தல் வெற்றி விழா

11. 1. 46-ந் தேதி கோலாலம்பூரில் லீக் தேர்தல் வெற்றி விழா இந்திய முஸ்லீம்களால் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று பிரம்மாண்டமான ஊர்வலம் முக்கிய தெருக்களின் வழியாக சென்று மாலையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜனாப்கள். அப்துல் மஜீது, எஸ். ஜெ. ஷாபி முதலியோர் முஸ்லீம் லீகை ஆதரித்தும், ஜின்னாவைப் போற்றியும், பாகிஸ்தான் திட்டத்தை வற்புறுத்தியும், தமிழிலும், உருதுமொழியிலும் பேசினார்கள். மௌலவிகள், அப்துல் அஜிஸ், இமாம் முதலியவர்களால் கிராஅத் ஓதப்பட்டது.

ஜின்னாவை வாழ்த்தியும், பாகிஸ்தானை ஆதரித்தும், ஜனாப் ஜின்னாவுக்குத் தந்தி கொடுக்கப்பட்டது.


சைன்யவசதி, கஷ்ட நிவாரண சகாய நிதிக்கு
உதவி தேவை
ஏனென்றால்

**மே. த. கவர்னரின் யுத்த நிதி**

சண்டை காலத்தில் போர்வீரர்களுக்கு எப்படி உதவியதோ, அதேபோல் கடல் கடந்த நாடுகளில் சேவை செய்யும் இந்திய, பிரிட்டிஷ் துருப்புகளின் நலன்களுக்கு இந்நிதி உதவுமேயானால் அதன் உதவி மிகத்தேவை. ஆகவே

தயவுசெய்து தாராளமாகவும், மிக அவசரமாகவும்
பணம் கொடுத்துதவவும்

★

ஏனவே

தயவு செய்து உங்களது பணத்தை ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள், கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பிக் கொடுக்கவும்.

குடி அரசு

1946-ஞு பிப்ரவரிமீ 2-உ

## காந்தி—யார் ? வரவு

தோழர் காந்தியார் சென்னைக்குவந்து 10-நாட்கள் ஆகின்றன. அங்கு ஒருவாறு அவரது அலுவல் முடிந்தது. இனி அவர் மதுரைக்குச் செல்லுகிறார். அங்கும் அனேகமாய் சென்னையில் செய்த காரியத்தைத்தான் மதுரையிலும் செய்வார். ஆனால் சென்னையில் நடந்த அளவு மூடநம்பிக்கைப் பிரசாரம் மதுரையில் நடக்காது என்பதோடு சென்னையிலுள்ள பார்ப்பன ஆதிக்கமும், மூடநம்பிக்கை மக்களும், மதுரையில் இருக்காது என்றே கருதலாம்.

மதுரையில் சில புது ரிக்ரூட் காங்கரஸ்காரர்களைத் தவிர பழைய காங்கரஸ்காரர்கள் பெரிதும் காந்திய சூட்சியை உணர்ந்தவர்களே ஆவார்கள். எனினும் எப்படியோ நடந்து போகட்டும். காந்தீயப் பிரசாரம் சந்தி சிரிக்கும் நாள் தூரத்தில் இல்லை. அதை மக்கள் உணர்ந்துகொண்டு தங்கள் தவறுக்குஆக வருந்தும்நாளும் தூரத்தில் இல்லை.

திராவிட நாட்டிற்கு காந்தியாரின் வரவு இந்திப் பிரசாரத்திற்குப் பெரும் பாகம் ஆக்கமளித்தது. இது வெற்றிபெற்றால்—வெற்றி பெற இடம் கொடுத்தால், இதன் பயன் என்னவாய் முடியும் என்பதுபற்றி சிறிது சிந்தித்தால், அதன் அபாயம் நன்றாய் விளங்கும். சமயத்துறையில் வடநாட்டு ஆதிக்கமும், வடநாட்டு ஆகமமும், கலையும், புராணமும், வடநாட்டு மொழியும்புகுந்ததாலேயே சமயத் தலைமை, சமய ஆதிக்கம், சமய சாதனங்களில் திராவிடருக்கு இழிவு, பிரதிநிதித்துவமின்மை ஆகியவை திராவிடநாட்டில் ஏற்பட முடிந்தது.

இப்போது அரசியல் துறையில், அரசியலுக்காக இந்தி அவசியம் என்று ஏற்பட்டு, இந்தி திராவிட நாட்டில் பிரதானம் பெற்றுவிடுமானால்—இந்தி அவசியம் பெற்றுவிடுமானால், அரசியலும், சமய இயல் போலவே படுபார்ப்பன ஆதிக்கமாகி, திராவிடர்கள் அதிலும் தீண்டப்படாதவர்களாக வெளியில் நிற்க வேண்டியவர்களாவார்கள் என்பதில் தினைத்துணையும் ஐயம் இல்லை.

கோவில்களின் உள்த்துறைக்கு வடமொழி எப்படி அவசியம் பெற்று ஆதிக்கம் செலுத்துகிறதோ, அதேபோல் அரசியலில் இந்தி அவசியம் பெற்றுவிட்டது. இதைக்காயம்செய்து ஆணி அடித்துவிட்டுப் போகவே காந்தியார் வந்திருக்கிறார்—வரவழைக்கப்பட்டிருக்கிறார் என்று வலிமையாய்க் கூறலாம்.

இக்கூற்றுக்குச் சான்று காந்தியார் அவர்கள் 29-1-46ந் தேதி சென்னையில் காங்கரஸ் ஊழியர்களுக்கு உபதேசம்செய்த மந்திரங்களில் இருந்து காணலாம். (கீழே எடுத்தாளப்படுபவை, சென்னை 30ந் தேதி, வெளியூர் 31ந்தேதிய "தினசரி" முதல் பக்கம், முதல் இரண்டு கலங்களில் காணப்படுபவைகளாகும்)

"காந்தியார் காங்கரஸ் ஊழியர்கள் இடையில் உட்கார்ந்து பேசும்போது முதல் முதலாக உங்களில் எத்தனை பேருக்கு இந்துஸ்தானி "புரிந்துகொள்ள முடியுமென்று கேட்டார். 60 பேர்களே கைதூக்கினார்கள் காமராஜநாடார் கை தூக்காததைப் பார்த்து உங்களுக்குக்கூட இந்துஸ்தானி தெரியாதா என்று கேட்டார்"

மற்றும்,

"ராஷ்ட்டிரபாஷையைப்பற்றி காங்கரஸ் தீர்மானம், எல்லா காங்கரஸ் நடவடிக்கையும் ஹிந்துஸ்தானியில் நடத்த வேண்டும் என்ற விதி எல்லா காங்கரஸ்காரர்களையும் கட்டுப்படுத்தும்.

இத்தனை வருஷமாய் இந்துஸ்தானியை கற்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி இருந்தும்கூட காங்கரஸ்காரர்கள் கற்றுக்கொள்ளாதது துர்ப்பாக்கியமான காரியமாகும்"

என்றும் பேசி இருக்கிறார்.

இந்தப் பேச்சுக்களை ஊன்றிக் கவனித்தால் முதலாவது காமராஜநாடார் அவமானப்படுத்தப்பட்டதும், இரண்டாவது காங்கரஸ் தீர்மானப்படி, காமராஜநாடார் காங்கரஸ் தலைவராக இருக்கத் தகுதிஇல்லை என்பதும், மூன்றாவது அவரும் மற்றும் இந்தி தெரியாதவர்களும், காரியக்கமிட்டி மெம்பராவதற்கு அருகதை கிடையாது என்பதும் பொதிந்திருப்பது நன்றாய் விளங்கும்.

அவ்வளவு பெரிய கூட்டத்தில் 50, 60 பேர்களே இந்தி தெரியும் என்று கை தூக்கியும், காந்தியார் இந்தியிலேயே பேசினார்.

இதன் அமல் எப்படி இருந்தாலும் அரசியலின் பேரால் வடமொழி—அன்னியமொழி எவ்வளவு தூரம் கட்டாயப் படுத்தப்படுகிறது என்பதும், அரசியல் போர்வையில் இந்திமொழி எவ்வளவு தூரம் பரப்பப்படுகிறது என்பதும், இதற்குஆக எவ்வளவுதூரம் நமது பணம் வசூலிக்கப்படுகிறது என்பதும் மிகமிக சிந்திக்கத்தக்கதாகும்.

இந்தியின் ஆதிக்கம் பார்ப்பனர்கள் கையில் இருக்கவும், அதன் பேரால் பார்ப்பனர்கள் உத்தியோகம் பெற்று வாழ்வு நடத்தவும், அதற்கு ஆகப் பணம் நம் திராவிட மக்கள் கும்பிட்டுக் கொடுக்கவுமான ஈன நிலையில் நாம் இருக்கிறோம்.

திராவிடநாட்டில் எல்லா திராவிட மக்களுக்கும் புரியும்படியான திராவிட மொழி ஒன்று இருக்கின்றது. அது ஆரியக் கலப்பால் பலமொழியாக, இன்று நான்கு மொழியாக ஆக்கப்பட்டு, திராவிட மக்களை நான்கு பிரிவாகவும், திராவிடநாட்டை நான்கு பாகமாகவும் செய்யப்பட்டு விட்டது. இந்த நான்கு பாக மக்களுக்குமாவது, தனித்தனி நாடு, மொழி, சுதந்திரமில்லாமல் நால்வர் தலையிலும் ஆரிய நாடும், ஆரிய மொழியும், ஆதிக்கம் செலுத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

இன்றையதினம் தமிழர் கிளர்ச்சிக்கு அதாவது திராவிடம், திராவிடநாடு என்கின்ற பிரச்சினைக்கு இல்லாவிட்டாலும் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சிக்காவது தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நாடுகளில் தமிழ் நாட்டைப்போன்ற அளவு கிளர்ச்சி இருக்கிறதா என்றால் இல்லைஎன்றுதான் சொல்ல

வேண்டும். ஏன் என்றால் அங்கும் ஆரியம் அதிகமாய்க் கலந்துவிட்டது. மொழியிலும் எழுத்துக்களிலும், ஆரியமயமாய்க் கலந்துவிட்டதோடு, எப்படியோ தமிழ் இலக்கண, இலக்கியம், சரித்திரம் முதலியவை அடியோடு அங்கு இல்லாமலே போய்விட்டன.

சமயத்துறையில்கூட தமிழில் உள்ள இலக்கியம் எதுவும் தெலுங்கு, கன்னட, மலையாள நாட்டில் இல்லாமல் போனதோடு அங்கெல்லாம், இராமாயணம், பாரதம், முதலியவைகளே பரப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் தங்களை திராவிடர்கள் என்றும், திராவிட நாட்டவர் என்றும் அறிந்துகொண்டபோதிலுங்கூட, திராவிடர் வேறு, ஆரியர் வேறு என்பதும், திராவிடக்கலை, ஆச்சார அனுட்டானம் வேறு, ஆரியக்கலை, ஆச்சார அனுட்டானம் வேறு என்பதும், சமுதாயத்தில்திராவிட மக்கள் ஆரிய மக்களுக்கும் தாழ்வாக, இழிவாகக் கருதப்படுவதும், நடத்தப்படுவதும் தவறு என்பதும், அவர்களுக்கு எப்படித் தெரியும்? எப்படித் தோன்றும் என்று கேட்கிறோம்.

உண்மையில் அந்த (தெலுங்கு, மலையாள, கன்னட) நாடுகளில் வடமொழி இவ்வளவு கலராமல் இருந்து, தமிழ் வேறு மொழி என்கின்ற உணர்ச்சி இவ்வளவு புகுத்தப்படாமல் இருந்தால், திராவிட நாட்டு சமய இயலும், அரசியலும், வடவற்கு இவ்வளவு அடிமைப்பட்டிருக்காது என்பதோடு பொருளாதாரமும் இவ்வளவு சுரண்டப்பட இடமேற்படாது என்றே சொல்லுவோம்.

காந்தியாரைச் சுற்றிலும் பார்ப்பனர்களும், செல்வர்களும் அரண்போல் இருந்து வந்திருக்கிறார்களே ஒழிய இந்நாட்டின் உண்மைத் திராவிட மகன் யார் அவரிடம் நெருங்க முடிந்தது? என்று கேட்கிறோம்.

காந்தியார் உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நண்பராய், ஏழைகள் நண்பராய் இருந்திருப்பாரானால், அவர் பக்கத்தில் உயர் ஜாதி-தங்களை மேன்மைப்படுத்திக்கொண்ட மக்களும், செல்வந்தர்களும் காந்தியாரை நெருங்கிஇருப்பார்களா, அவரைமதித்து இருப்பார்களா? இவ்வளவு செல்வத்தை பணம், காசு, நகை முதலியவைகளை அள்ளி அள்ளிக் கொடுக்க முன்வருவார்களா? என்று கேட்கின்றோம்.

திவான் சர் சி. பி., அட்வைசர் சர் ராமமூர்த்தி, ரைட் ஆனரபிள் ஸ்ரீனிவாச சாஸ்திரி, பதஞ்சரிசாஸ்திரி முதலாகிய பார்ப்பனப் பிரமுகர்களுடன் மாத்திரம் குடும்பத்தோடு அளவளாவுதலும், சி. விஜயராகவாச்சாரியார், எஸ். சத்தியமூர்த்தி சாஸ்திரியார் இவர்களைப் பற்றிமாத்திரம் புகழ்பாடுதலும், ராஜகோபாலாச்சாரியார்கள் இருபுறம் அங்கம் பெறுதலும், திரும்பத் திரும்ப சீனிவாச சாஸ்திரியாரைப் பார்த்து ரகசியம் பேசுதலும் ஆனால் காமராஜநாடார், முதலிய பார்ப்பனரல்லாத காங்கரஸ் ஊழியர்கள் கூட்டத்தில், கீழே சாதாரண மக்களோடு அனாமதேயமாய்உட்கார்ந்திருக்கவும், நாடாரை காந்தியார் அழைத்து "நீர் இன்னுமா இந்தி கற்காதிருக்கிறீர்? இது காங்கரஸ் தீர்மானத்திற்கு விரோதம், துர்ப்பாக்கியம்" என்று இழிவுபடுத்தவும் முத்துரங்க முதலியார், ஆதிகேசவ நாயக்கர், பக்தவத்சலம், நாதியே இல்லாமல் போனதுமான நிலை ஏற்பட்டிருக்குமா? என்று கேட்கிறோம். தமிழனின் மானமற்ற நிலைமைக்கும் ஒரு எல்லையுண்டு. ஆனால் இந்த காந்தியார் வரவும், இந்திப் பிரச்சாரமும் தமிழனின் இழிவை—மானமற்ற தன்மையை எல்லையற்றதாக ஆக்கிவிட்டதென்றே சொல்லலாம்.

தமிழ்நாட்டில் காங்கிரசுப்பிரசாரம், நடத்தப்படுவ்தும், காந்திப்புராண காலக்ஷேபம் செய்யப்படுவதும் அவருக்கு ஏராளமான பொருள் காணிக்கையாகக் கொடுத்துஆசீர்வாதத்திற்குத்தலைகுனிவதும் தமிழர்கள். ஆனால் கர்ப்பக்கிரகத்துக்கு வெளியில் நிற்பது போல், காந்தியாரிடமிருந்து விலகி-எட்டி இருக்க வேண்டியவர்களும் தமிழர்கள். காசு கொடாதவர்களும் பாடுபடாதவர்களும் பார்ப்பனர், ஆனால் உரைந்து கொண்டும், ஒட்டிக்கொண்டும் இருப்பவர்கள் பார்ப்பனர்கள்,என்றால், இது சமயத்துறை கோவில்துறை, ஆகமத்துறை, என்பது போலவேதான், அரசியல்துறை என்பதை மெய்ப்பிக்கின்றதா இல்லையா? என்று கேட்கின்றோம்.

கடைசியாக ஒன்று சொல்லுகின்றோம். இவ்வளவு பணக்காரர்கள், காந்தியாருக்கு இவ்வளவு பணம் கொடுத்துப் பார்ப்பனர் தயவு பிடித்துக் காந்தியாரையும் இவ்வளவு பெருமைப் படுத்துகிறார்களே, இதனாலேயே இந்தப் பணக்காரர்கள் காந்தியாரைத் தங்களுடைய (பணக்காரருடைய) நலனுக்கு உழைக்கின்ற மகான் என்று சந்தேகமறக்கண்டுதானே இப்படி நடக்கிறார்கள்? என்பதும் காந்தியாரும் அந்தக் கொள்கை உடையவராய் இருப்பதால்தானே இப்படி அவர்களிடம் பணம் பெறும் வேலை நடக்கிறது? என்பதும் இதற்குத் தக்கபடி தானே காந்தியார் இனியும் நடந்துகொள்ள வேண்டிவரும்? என்பதும் ஆகையால் தானே தாராளமாகக் கையை நீட்டி, இந்தப் பணக்காரரிடம் தாராளமாய்த் தலையை நீட்டி, முறையே பணமும், முடியும் பெறுகிறார் என்பதுமல்லாமல் இதில் வேறுஇரகசியம் என்ன இருக்கமுடியும்? என்று கேட்கிறோம்.

ஆகவே திராவிட மக்கள், காந்தியாரையும், காங்கிரசையும் காத்துக் கிடந்து, தனிப்பட்ட சுயநலவயிர் வளர்க்கலாம், வாழ்க்கை உயர்வுபெறலாம் என்பதும், அப்புகழ்பாடி, தேசியப்புகழ் பெறலாம் என்பதும், அப்படி இல்லாவிட்டால் மடத்தனமும், மானமற்ற தன்மையும் என்பதல்லாமல்

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

அல்லது மானமிழந்த சுயநல மென்பதல்லாமல் வேறு என்னவாய் இருக்கமுடியும்? என்று கேட்கிறோம். ஆகவே காந்தியார் வாழ்வு மாபெரும் பித்தலாட்டமும் இமய மலை அளவு கேடு விளைவிப்பது மாகிவிட்டது.

எனவே திராவிட இளைஞர்கள் இதை உணரவேண்டும். உணர்ந்து கவனிக்கவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

குறிப்பு:-தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், என்பவை ஒரு மொழியே தவிர தனித்தனி மொழியல்ல என்பதுபற்றிப் பெரியார் திருநெல்வேலி மகாநாட்டின் திறப்புவிழாவில் பேசிய பேச்சை வாசிக்க வேண்டுகிறோம்.

## தாழ்த்தப்பட்ட மக்களும் தேர்தலும்

தாழ்த்தப்பட்ட மக்கள் காங்கரசுக்கு எதிராக, ஷெடியூல்ட் வகுப்பு பெடரேஷன் மூலமாகவோ, தனியாகவோ தேர்தலுக்கு நிற்கலாமா என்று பலர் நம்மைக் கேட்கிறார்கள்.

இவர்கள் தேர்தலுக்கு நிற்பதானது இன்றையத் தேர்தல் முறையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒத்துக்கொண்டுவிட்டதாக உலகம் கருதப்படத்தான் உதவி அளிக்குமே தவிர, மற்றபடி வேறெந்தக் காரியத்திற்கும், பயன்படாது என்பது நமது கருத்தாகும்.

திராவிட மக்கள் நிலைபோலவே, நம் மாகாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அவர்களின் நம்பிக்கையை ஒருமுகமாகப் பெற்ற தலைவர்கள் இல்லை. "தியாகம்" என்ற பக்கம் திரும்பிப் பார்த்த தலைவர்களும் இல்லை. அல்லது காங்கரஸ்—ஆரியம்வேறு, தாழ்த்தப்பட்ட மக்கள் தன்மை வேறு என்பதற்கான குறிப்பிட்ட கொள்கையும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களில் பெருவாரிப்பேர், திராவிட கழகத்தாரைப் போலவே, இந்துக்கள் என்று சொல்லிக் கொண்டு, இந்துமத சம்பிரதாயப்படி, கடவுள், ஜாதி, பண்டிகை, நாள், கோள் பாராட்டுகிறவர்களாவார்கள். இந்தப்படியான மக்கள் யாராய் இருந்தாலும், காங்கரசைக் குற்றம் சொல்லுவதும், காங்கரசை எதிர்ப்பதும், உண்மையாகவோ, அறிவுடமையாகவோ, இருப்பது அதிசயமேயாகும். அவர்களுக்கு ஏற்பட்ட இன்றைய தேர்தல் முறையானது மிக மிக மோசமும், சாதாரணத்தில் வெற்றிபெற முடியாததுமாகும். இவைகளைத்திருத்தி அமைப்பதற்குச் சர்க்காரோடு ஒத்துழையாமைசெய்து, அல்லது போராடித் தேர்தலைப் பகிஷ்கரித்துச் சண்டித்தனத்தின் மூலம் கிளர்ச்சி செய்வதே தகுந்த வழியாகுமே யல்லாமல் தேர்தலுக்கு நிற்பது பயன் தராது.

இன்றைய நிலையில் இச்சமுதாயத்தில் தேர்தலுக்குக் காங்கரசின் மூலம் நிற்பவர்களைவிட, காங்கரசைவிட்டு விலகிநிற்பவர்கள் எந்த விதத்திலும் அச்சமுதாயத்திற்கு எவ்வித நலனையும் செய்பவர்களாகமாட்டார்கள்.

ஏனெனில் முன்னையவர்கள் நிற்பதன்மூலம், சட்டசபை சென்றாலும் ஒன்றும் செய்யக் காங்கரசாரால் அனுமதிக்கப்படமாட்டார்கள். பின்னவர்கள் நிற்பதன்மூலம் சட்டசபை ஸ்தானம் பெறுவது அசாத்யமானதாகும், சாத்தியமானாலும், பெருமை பெறுவது தவிர ஒன்றும் செய்யமுடியாதவர்களாவார்கள். ஆகவே அடிப்படைத் தத்துவத்தையே மாற்றி அமைக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறவர்கள், அற்ப நலத்திற்கு, அதுவும் பெரிதும் பொதுநலமற்ற காரியத்திற்கு இணங்குவதோ அதில் இறங்குவதோ, பரிதபிக்கத்தக்க காரியமென்பது நமது கருத்து.

குறிப்பாகவும், முக்கியமாகவும், அச்சமுதாயத்திற்கு ஒன்று சொல்லுவோம். அதாவது தாழ்த்தப்பட்ட மக்கள் நலத்திற்குத் தலைவர்களாய் இருப்பவர்கள், பதவியில் இல்லாதவர்களும், பதவியில் பற்று, மோகம், அவசியம் இல்லாதவர்களுமாகவே இருக்கவேண்டும். தலைமையில் இருப்பவர் தவிர மற்றவர்கள் அச்சமுதாயத்தின் பேரால், பதவி, பட்டம், அதிகாரம், சம்பளம், சன்மானம் பெறலாம், ஆனால் தலைவர்கள் அந்தப் பக்கம் திரும்பிப்பார்க்கவே கூடாது. சர்க்கார் இம்மாதிரியாகத் தலைவர்களுக்குப் பதவி, பட்டம், உத்தியோகம், சம்பளம் சன்மானம், கொடுப்பது அனேகமாக அவ்வகுப்பு மக்களை வஞ்சித்து அடக்கித் தங்களுக்கு அனுகூலமாகவும், தங்கள் எதிரிகளுக்கு எதிரிகளாகவும், ஆக்கிவருவதற்கே அல்லாமல், வேறு கருத்து 100க்கு 90 காரியங்களில் இருக்காது. கடைசிப் பட்சம் பதவி பெற்றவர்கள் தலைமைப்பதவியை வேறு ஒருவருக்கு விட்டுவிட்டாவது, பதவி பார்க்கவேண்டும். தலைமைப் பதவியும், அதிகாரம், பட்டம், சம்பளம்,பதவியும் இரண்டும் ஒருவரே பார்த்தால், சர்க்காரிலும், பொதுமக்களிடத்திலும், அப்படிப் பட்டவருக்கு, அந்த வகுப்புக்கு மதிப்பு,மரியாதை,நம்பிக்கை இருப்பது மிகக்கஷ்டமாகும்.

ஆகவே இப்போது சட்டங்களையும், திட்டங்களையும் மட்டு மரியாதை இல்லாமல் வெறுத்து உதாசீனம்செய்து போராடவேண்டிய மிக நெருக்கடியான காலமாகும். இந்த சமயத்திற்கு வேண்டியது சட்டசபையும்,சட்டசபையில் இருக்கும் தன்மையும், நமக்கு முடியாததும், முடிந்தாலும் பொருத்தமற்றதாகும். 20 ஆண்டு தொடர்ந்த அனுபவத்தின்மீது இதைச் சொல்லுகிறோம். ஆகவே ஒரு அளவுக்காவது, தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள், பட்டம், பதவி, சட்டசபை, ஆகியவைகளை அதில் நம்பிக்கையோ, அவசியமோ உள்ளவர்களுக்கு விட்டுவிட்டு, வெளியில் நின்று போராடுவதற்குத் தயாராய் இருக்க வேண்டுமென்று, உண்மையும், உரமும் உள்ள தோழர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இதுதான் நம்மைச் சட்டசபைத் தேர்தலைப்பற்றிக் கேள்வி கேட்டதோழர்களுக்கு நம் விடையாகும்.

### மாவட்டக் கழகம்

27-1-46ல் நடைபெற்ற நெல்லைமாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் தோழர்கள் எ. வி. முத்தையா தலைவராகவும் எ. அருணாசலம் துணைத் தலைவராகவும், கே. எம். பிரமநாயகம் பொருளாளராகவும், எஸ். எஸ். அர்ச்சுனன் செயலாளராகம், கே. வி. கே. சாமி, எஸ். வி. டேவிஸ் ஆகியோர் கூட்டுச் செயலாளராகவும் மற்றும் 13 உறுப்பினர்களும் கொண்ட நிர்வாகக்குழு புதிய ஆண்டிற்கு அமைக்கப்பட்டது.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

லாமல், தங்கள் மொழியிலுள்ள ஒலி எழுத்துக்களை ஏற்படுத்திக்கொடுத்து, அதற்கேற்ற இலக்கணத்தையும் அமைத்துக் கொடுத்துவிட்டார்கள். தமிழர்களுக்குக் குறிப்பாகத் தமிழ்ப் பண்டிதர்களுக்குச் சிறிதாவது இனப்பற்று, இருந்திருக்குமானால் ஆரியர்களுடைய இந்தத் தந்திரம், சூட்சி, வெற்றிபெற்று, நம் மக்கள் இவ்வளவு பிரிவினைக்கும், வேற்றுமைக்கும் ஆட்பட்டிருக்க முடியாது. நேற்றுத் தோன்றிய மலையாள எழுத்துக்கள், அதற்கு முன் தோன்றிய கன்னட, தெலுங்கு எழுத்துக்கள், அந்தந்த பாஷைப் பற்றுக்கள் ஆகியவைகளில் அவர்களுக்கிருக்கும் உணர்ச்சியில், தமிழ்ப்பண்டிதர்களுக்குப் பத்தில் ஒரு பங்குகூட இல்லை. தமிழ், தமிழன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிற தமிழன், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவைகளை விலக்கியே பேசுகிறான். வெறுப்புக்கொண்டே பேசுகிறான். அதன் பயனாகவே மற்றவர்களும் விலகவே பார்க்கிறார்கள். இதனால் நமக்கொன்றும் பெரிய நஷ்டமில்லையென்று சொல்லலாமானாலும், தமிழகத்தைச்சுற்றி மூன்று புறத்திலுமுள்ள மக்கள், ஆரியமயமாய் இருந்தால், அது நமக்குத் தொல்லையும், பல துறைகளில் தடையுமான காரியமாய் இருக்காதா? என்று சிந்திக்க வேண்டுகிறேன். "திராவிடநாடு திராவிடருக்கு" என்று ஆனால், இந்தக்குறைபாடுகளைச் சுலபத்தில் தீர்த்துக் கொள்ள முடியும்.

மற்றும் உண்மையாகவே தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் முதலியவர்களைத் தமிழர்களாக்க வேண்டுமானால், திராவிடர்கள் என்று சொல்லித்தான் சேர்க்க முடியும். ஆதலாலேதான்நாம் திராவிடர் கழகம் என்று பேர்மாற்றிக் கொள்ளவேண்டியதாயிற்று. திராவிடமானது, இந்தியா என்னும் பிணைப்பில் இருந்து பிரிந்து கொள்ள, திராவிடத்திற்கும் திராவிடம் அல்லாததற்கும் இருக்கும் பேதமும், திராவிடத்திற்கு, திராவிடமல்லாததால் ஏற்படும் கெடுதியையும், சம்மந்தமற்ற தன்மையையும் நாம் முதலில் உணரவேண்டும்.

உண்மையில் திராவிட நாடு, திராவிடமற்ற மற்ற நாட்டிலிருந்து பல வகையிலும் வேறுபட்டதேயாகும். மொழி, சமயம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம், அணி, இசை, சுவை, உணர்ச்சி, முதலியவைகளில், ஒற்றுமையும் பொருத்தமுமற்றதாகவே இருக்கிறது.

சாதாரணமாகத் திராவிட நாட்டிலுள்ள திராவிடர்கள், ஆரியரை வெறுக்கிறார்கள். அவர்களுக்கு அடிமையாய் இருப்பதைப் பற்றி நாணமடைகிறார்கள். திராவிட நாட்டிலுள்ள முஸ்லிம் தோழர்களோடு, திராவிடர்கள் ஒற்றுமை உணர்ச்சி காட்டுகிறார்கள். ஆனால் திராவிடம் நீங்கிய இந்தியாவில் ஆரியத்தை, ஆரியமல்லாத மக்கள் ஏற்று இழிவையும், தாழ்வையும், சகித்துக் கொள்ளுகிறார்கள். முஸ்லீம்களிடத்தில், அதாவது இந்த நாட்டிலேயே இருந்து வாழ்ந்து வரத்தக்கவர்களான முஸ்லீம்களை, அன்னியனாகவே கருதி வெறுக்கிறார்கள். மொழியில், திராவிட மொழி ஒரு தனிமொழியாகவும், இந்தியாவில்,திராவிடமல்லாதமற்ற நாட்டு மொழிகள் யாவும், ஒரு சம்மந்தமுடையதாகவும், மற்றும் ஒருவருக்கொருவர் பற்றுதலுடையவராகவும் இருந்து வருகிறது.

சமுதாயத்தில் திராவிடர்கள், மற்றவர்களிடம் எந்தவித ஒற்றுமையும் கொண்டவர்களாய் இல்லை.

(தொடரும்)

---

## அறிவிப்பு

பத்திரிக்கை காகிதம்குறிந்த காலத்தில் வந்து சேராததால் 2-2-46 ல் வெளியாக வேண்டிய "ஜஸ்டிசைட்" பத்திரிகை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம். வாசகர்கள் மன்னிப்பார்களாக.

மானேஜர்

## தேவை

"திராவிட நாடு திராவிடருக்கே," என்ற அழகிய பல கலருடைய ஸ்டீல் தகட்டில் தயாரித்த போர்டு, (தலைவாயிலை அலங்கரிப்பதற்கு, அருமையானது) விற்பனை செய்ய எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை, தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விபரத்திற்கு

என். எஸ். ஜீவி

பெயின்டிங் ஒர்க்ஸ், கீலாகீழ வீதி. நாகை.

## சூழ்ச்சி வெளிப்பட்டது

17-1-46ல் நடைபெற்ற திருவண்ணாமலை அருணாசல ஈஸ்வரர் கோவில் டிரஸ்டிகள் கூட்டத்தில் "நகரப் பொது மக்களால்" தாழ்த்தப்பட்டோரைக் கோவிலுக்குள் அனுமதிக்கும்படி வேண்டி அனுப்பப்பட்டிருந்த மனுவைப்பற்றி விவாதிக்கப்பட்டபொழுது தோழர் பி. பி. உத்தண்டிபிள்ளை அவர்கள் மனுவை ஆதரித்து உடனே அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றார். உடனே அரிஜனங்களை ஈடேற்றுவதற்காகவே இருக்கிறோம் என்று சொல்லப்படுகிற, தாலுகாக் காங்கரஸ் கமிட்டித் தலைவரும், கோவில் டிரஸ்டியுமான தோழர். வி. வி. எஸ். கதிர்வேலுப்பிள்ளை அவர்கள் 'இப்பொழுது வேண்டாம், காங்கரஸ் ஆட்சி வந்த பிறகு விடலாம் என்று மனுவை எதிர்த்தார். பின் தீர்மானம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. தேசியத் தோழர்களின், தீண்டாமை ஒழிப்பின் சூழ்ச்சி வெளிப்பட்டதைப் பற்றியே ஊரெங்கும் பேச்சாக இருக்கிறது.

## பெரியார் படத்திற்கும் இடங்கொடு!

நாகைத் தேசீய உயர்நிலைப் பள்ளியில் காந்தியார், நேரு போன்றாரின் படங்கள் மாட்டப்பட்டிருந்தன இதைக் கண்ட திராவிட மாணவர்கள் பெரியார் ஈ. வெ. ரா. படத்தையும் வைக்குமாறு கோரி 250-உயர் வகுப்பு மாணவர்கள் கையெழுத்திட்ட ஒரு விண்ணப்பத்தைத் தலைமை ஆசிரியரிடம் கொடுத்தனர். திராவிட மாணவர்களின் எழுச்சியைக் கண்ட ஆசிரியர் 21-1-46ல் மேற்கண்ட படங்களை அங்கிருந்து அகற்றிவிட்டார். அப்படங்களை மீண்டும் வைக்குமாறு தேசிய மாணவர்கள் சில ஆசிரியர்களின் துணைகொண்டு கிளர்ச்சி செய்வதாகத் தெரிகிறது. ஆனால் திராவிட மாணவர்களும தளர்ச்சியடையமாட்டார்கள் என்றே தெரிகிறது.

## கிராமக் கழகம்

18-1-46 வெள்ளியன்று எஸ். வி. பொன்னுசாமி அவர்களால் கிராமமுன்னேற்ற வாலிப சங்கத்தை திறந்து வைத்து சிங்கார நாட்டார் தலைமையில் எஸ். வி. பொன்னுசாமி அவர்களைத் தலைவராகவும், வே. சி. அர்ச்சுனன் அவர்களைப் பொக்கிஷதாரராகவும் மற்ற நான்கு நண்பர்களைக் கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வழக்குத் தள்ளுபடி

2-9-45 ஞாயிறன்று திட்டக்குடியில் நடைபெற்ற தென்னாற்காடு மாவட்ட 2வது மாநாடன்று கொடியேற்றுவதற்காகக் கொடிமரம் நடப்பட்டிருந்த இடம் பொதுஜனப் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்ததென்று தோழர்கள் பி. நாராயணன், எஸ். சக்கரபாணி ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு பலமுறை தள்ளிப்போட்டு 26-1-46ல் திட்டக்குடியில் டிப்டி தாசில்தார் ரெங்க பாஷ்யம் நாயுடு அவர்களால் விசாரிக்கப்பட்டு, சரியான சாட்சிகள் கிடையாதென்று வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

---

சிதம்பரம் அண்ணாமலை நகர் ரயில்வே பிளாட் பாரத்தில், நாளது ஜனவரியிலிருந்து குடி அரசு விற்பனை விலைக்குக் கிடைக்கும்.

எம். கே. சுந்தரம்
ஏஜெண்டு

## பொதுக் கூட்டம்

28-1-46 மாலை திருவண்ணாமலைத் தாலூகா திராவிடர் கழகத்தின் சார்பில், பெரியார் மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள், காந்தீயப்புரட்டு, நாட்டுப் பிரிவினையின் அவசியம்பற்றி மிக விரிவாகப் பேசிக்கொண்டிருக்கையில், சில காங்கரஸ் காலிகள் குழப்பம் செய்ய முயன்றனர். உடனே டவுன் போலீஸ் சப்இன்ஸ் பெக்டர் தோழர், எஸ். எம். வீரணன் அவர்கள் காலிகளை விரட்டி அடித்துக் கலவரம் அடக்கப்பட்டுக் கூட்டம் இரவு 9-மணிவரை நடைபெற்று இனிது முடிவுற்றது. சப்இன்ஸ் பெக்டரின் உதவி போற்றத்தக்கது.

## ஆரம்பவிழா

மதுரையில் 20-1-46 மாலை தெற்கு வாசல் நாடார் வித்தியாசாலைத் தெரு திராவிட இளைஞர் சங்கக்கட்டிடத்தில் தாளமுத்து—நடராசன் ஞாபகார்த்த இலவச வாசகசாலை ஆரம்பக்கூட்டம் தோழர் ஆர், இராமானுஜம் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் சீனு, சம்பந்தம், முத்தையா ஆகியோர் இயக்கப் பாடல்கள் பாடினார்கள். பின்னர் தோழர் தங்கராஜ் பி. ஏ., கழகக்கொடியை ஏற்றிவைத்து கொடியின்கீழ் நாம் போராடவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். பின்பு தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தாளமுத்து—நடராசன் வாசகசாலையைத் திறந்துவைத்து அவர்கள் எந்த லட்சியத்திற்காக உயிர் துறந்தார்கள் என்பது பற்றியும், பண்டைத்தமிழர்களின் நிலை, இன்றைய திராவிடர்களின் மானமற்ற வாழ்க்கை, புராணங்களின் புரட்டு, ஆரியர்களின் அகம்பாவ வாழ்க்கை முதலியவற்றை சரித்திர ஆதாரத்தோடும், மேல் நாட்டு நிகழ்ச்சிகளைக்கொண்டும் விளக்கிக்கூறியதோடு, திராவிடன் மீண்டும் வீரத்தோடுவாழ உயிர்க்கவி பாரதிதாசன் அவர்கள் இயற்றிய கவிகளைப் பாடிக் காட்டினார். தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஷை வாசகசாலையின் சார்பாக தோழர் ஆர். எஸ். மணி அவர்கள் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார். பின்னர் பலத்த காகோஷத்தினிடையே விருதுநகர் எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் தாளமுத்து—நடராஜன் படத்தைத் திறந்துவைத்து ஓர் அரிய சொற்பொழிவாற்றினார். பலர் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த முறையில் பதிலளித்தார். பின் கே. எஸ். ராசமான் கறுப்புச்சட்டைப்படையின் அவசியத்தை விளக்கிப் பேசினார். எம். எஸ். இராமசாமி நன்றிகூறக் கூட்டம் வாழ்த்தொலிகளோடு முடிந்தது.

## மறைவு

20-1-46ம் நாள், பொத்தனூர் கட்டளை இராமசாமிப்பிள்ளை இயற்கையெய்தியதன் நினைவாகத் தோழர் இரா. செகந்நாதன் அவர்களால் குடி அரசு வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

o o

25-1-46ல் அசூர்த் தோழர் கு. பெரியசாமி மனைவியார் இயற்கையெய்திய தன் நினைவாகக் குடி அரசு வளர்ச்சிக்கு அனுப்பிய ரூ. 1. வரப்பெற்றோம்.

நிலக்கோட்டை திராவிட மறுமலர்ச்சி இலவச வாசகசாலை நிதிக்காக
திராவிட மறுமலர்ச்சி நாடக சபை
M. R. ராதா & M. R. மங்களம் பார்ட்டியாரால்
**9-2-46** சனிக்கிழமை இரவு **9-30** மணிக்கு
**லட்சுமிகாந்தன்**
10-2-46 ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணிக்கு
**போர்வாள்**
என்னும் இரு நாடகங்கள் நிலக்கோட்டையில் நடைபெறும்.
திராவிட மறுமலர்ச்சி இலவச வாசகசாலையார்,
நிலக்கோட்டை.

**ராஜம் விலாஸ்**
கைத்தறி ஜவுளிகள் : : கலர் புடவைகள்
உயர்தர ரகங்கள்! உத்திரவாத ஜரிகை!!
80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
**ராஜம் விலாஸ்,**
சின்ன ஸெளராஷ்டிரா தெரு, உறையூர் P. O. திருச்சி.

**தயாராகி வருகிறது**
திராவிடநாடு அமைக்கப்பட்ட படத்தில் நமது அன்புநிறைந்த தலைவர்—தளபதி இவர்களுடைய உருவமைந்ததுமான பிக்சர் காலண்டர்கள் கூடிய விரைவில் வெளிவந்துவிடும்.
அன்பர்களுக்கு:-மேல்கண்டுள்ள பிக்சர் காலண்டரை கண்ணாடி ப்ரேம் போட்டுக்கொள்ளவும், காலண்டராக உபயோகித்துக்கொள்ளவும், ஏதுவாயிருக்குமென அறிவித்துக்கொள்ளுகிறோம்.
இன்னும் சொற்ப காலண்டரே பதிவு செய்யாமலிருந்து வருகிறது. உடனே அவரவர்கள் ஆர்டரை பதிவுசெய்துவையுங்கள்.
விபரங்கட்கு:-
திராவிடன் பதிப்பகம், தபாற்பெட்டி 18, வேலூர் வ. ஆ.

# திராவிடநாட்டுச் செய்திகள்

14-1-46ல் திருவையாறு அந்தணக் குறிச்சியில் எம். தனிக்கிலாஸ் தலைமையில் நடந்த ஆதித்திராவிட கழகத் திறப்பு விழாவில் தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா ஈ. வெ. ரா. அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார். தோழர் வி. மோசஸ் அம்பேத்கார் படத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் பிச்சை வடிவேலு மற்றும் பலரும் பேசினர்.

o o

10-1-46ல் தோழர் பி. ஆர். எ. சங்கரன் தலைமையில் நடந்த ஆதிதிராவிட மாணவர்கள் கூட்டத்தில் தோழர்கள் ஆனந்தம், நடேசன், வைரவன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

17-1-46ல் காட்டுப்புத்தூரில் தோழர் கே. எ. பாரிசாகிப் தலைமையில் நடந்த ஷெடியூல் பள்ளர் இளைஞர் சங்கக் கூட்டத்தில் தோழர்கள் வையாரப் பெருமாள், காத்தமுத்து, பிச்சமுத்து மற்றும் பலரும் பேசினர்.

o o

நன்னிமங்கலம் திராவிட வாலிபர் கழகச் செயலாளர் தோழர் நாகராஜன் அவர்களின் "பெரியார் ஈ. வெ. ரா. மளிகை 19-1-46 தோழர் வி. வீராசாமி பி. எ. தலைமையில் திறக்கப்பட்டது. தோழர்கள் மருதையா, பெரியசாமி, மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையனுப்பப்பட்டது.

o o

கொளும்பு, தோட்டப்பகுதி ஆதித் தமிழர் இந்திய வாலிபர் சங்கப் பொதுக் கூட்டம் 11-1-46ல் தோழர் என். பி. சின்னையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் குணசீலன், கதிர்வேல், செல்வராஜ், லாசர், செப்ஸ்டியான் மற்றும் பலர் பேசினர். நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

11-1-46ல் வி. அண்ணாமலை தலைமையில் நடந்த கரூர் மருத்துவர் சங்கக் கூட்டத்தில் அரசாங்க உத்தரவுப்படி பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் விடுமுறை விடத் தீர்மானிக்கப்பட்டது.

o o

பம்பாய், தாராவியில், திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் 2வது வருட 11வது மாதாந்திரக் கூட்டம் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் எம். சுப்பையா, சொற்பொழிவாற்றினார்.

o o

கண்ணன் பாக்கம், சாணாப்புத்தூர் மாநல்லூர் ஆகிய ஊர்களிலும். 29, 30 1-1-46ந்தேதிகளில் தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் இடங்களில் தோழர்கள் சிவசங்கு, வேதரத்தினம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

பிச்சாண்டர் கோவிலில் 25-12-45 மாலை 6-30 மணிக்கு ஷெடியூல்டு வகுப்பு இளைஞர் கழகம் தோழர் மாணிக்கவாசகம் தலைமையில் திறப்புவிழா நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் டி. கே. சீனிவாசன், தீனதயாளன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

கொழும்பு 24/36 பார்பர்ஸ்ட் ரீட்டில் அருந்ததியார், சமூக ஊழியர் சங்கத்தின் சார்பில் தோழர் வ. ஆ. அழகிறைவன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பல தோழர்கள் சமூகத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

o o

கோவை டவுன் முனிசிபல் எலிமென்டரி பாடசாலையில் ஜில்லா ஷெடியூல்ட் காஸ்ட் பெடரேஷன் பார்ட்டி மீட்டிங் தோழர் எம். சோணப்பன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

கொழும்பு ஆதிதிராவிட இளைஞர் கழக 18-வது ஆண்டு விழா கோள்பிட்டி பள்ளிக்கூட மண்டபத்தில் 12-1-46 இரவு 9 மணிக்கு தோழர் அ.ச. வேலு தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

கும்பகோணம் திருவள்ளுவர் சீர்திருத்தக்கழகத்தின் ஆரம்பவிழா 23-12-46 காலை 9 மணிக்குத் தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் பி. ஆர். பொன்னுசாமி, குருசாமி, ஷேக் இப்றாஹிம், மாரியப்பா, ஜி. எஸ். மணி முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

மாயனூர் பள்ளர் சிறுவர் சங்கத்தின் சார்பில் 24-12-45ந்தேதி ஒரு கூட்டம் தோழர் எஸ். எஸ். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

கவுத்தராஜ நல்லூரில் 2-1-46 மாலை 4-30 மணிக்கு தோழர் கே, எம். சங்கரம்பிள்ளையவர்களால் ஷெடியூல் வகுப்பு பெடரேஷன் திறந்துவைக்கப்பட்டது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் கே. ஆர். வீரையா அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. குடி அரசு திராவிடநாடு பத்திரிகைகள் சங்கத்திற்கு வரவழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

o o

பழநியில் 15-12-45ந்தேதி நவவீர செங்குந்த வாலிபர் சங்கத்திறப்பு விழா தோழர் ஜி. பி. குப்புசாமி முதலியார் பி. எ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் எஸ். நாமகிரி அம்மையார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர்.

o o

செட்டிபாளையத்தில 18-1-46ல் தோழியர் ராஜாம்மாள் பி. எ., அவர்கள் தலைமையில், மாணவிகள் கல்வி முன்னேற்றக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் பி. கே. வேணுகோபால் சொற்பொழிவாற்றினார்.

o o

கொழும்பு தமிழ்நாடு அருந்ததியார் சமூக சீர் திருத்தச் சங்கக்கூட்டம் 20-1-46ல் தோழர் ஒ. ஆ. மா. சாமி தலைமையில் நடைபெற்றது. நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

திருச்சி ஜில்லா மருத்துவர் சங்கப் பொதுக்கூட்டம் 19-1-46ல் ம. அ. இ. சுவாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், க. பிச்சை மற்றும் பலரும் பேசினர்.

o o

21-1-46 மாலை 6மணிக்கு திருச்சியில் தோழர் எம். சிங்காரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "ஆதித் தமிழ் மாணவர் கழகம்" என்ற பெயரை திருச்சி மாவட்ட தாழ்த்தப்பட்ட மாணவர் கழகம் எனப்பெயர் மாற்றப்பட்டது. அவ்வமயம் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

27-1-46 ஞாயிறு காலை 10 மணிக்கு மணத்தட்டையில் "குளித்தலைத் தாலூகா அம்பேத்கார் மாணவர் கழக ஆரம்ப விழா தோழர் ஆண்டியப்பன் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் மாணவர் கழகங்களின் அவசியம்பற்றிச் சொற்பொழிவாற்றினர். தோழர் ப. தங்கராஜ் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது.

o o

27-1-46ல் தஞ்சை ஒடுக்கப்பட்ட கத்தோலிக்க இளைஞர் சங்க ஆண்டு விழாத் தோழர் வி. சுந்தராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. ஆரோக்கியதாஸ் எஸ். அருள்ஞானம் முதலியோர் பேசியபின் தோழர் எம். சந்தான முத்தைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

செம்பியம் சர்க்கிள் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனப் பிரசாரக் கமிட்டி ஒன்று 20-1-46ல் நிறுவப்பட்டது.

o o

# திராவிடர் கழகங்கள்

20-1-46ல் நடந்த திருச்சி மாவட்ட திராவிடர் கழகக்கூட்டத்தில் தோழர் [illegible] சின்னதுரை அம்பலக்காரார் அவர்கள் தலைவராகவும் தோழர்கள் என். சங்கரன், எம். நடராசன் ஆகியவர்களை செயலாளராகவும் கொண்ட புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு திருச்சி மாவட்டத்திற்கு 10;000 உறுப்பினர்கள் சேர்ப்பதென்றும், ரூ. 5000 வசூலிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

26-1-46 சனி இரவு மேலகல்கண்டாற் கோட்டை திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் தோழர் இரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கழக இரண்டாவது ஆண்டு விழாவைப் பிப்ரவரி கடைசிவாரத்தில் நடத்துவதற்காக வசூல் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டதுடன், வாரம் ஒரு முறை சொற்பயிற்சி நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

o o

21-1-46ல் திருச்சேறை திராவிடர் கழகத்தின் சார்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் "புரட்சி ஏன்?" என்பதுபற்றியும் தோழர் இராமாமிர்தம் அம்மையார் "பூசாரும்—புராணமும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

24-1-46ல் சேலம், செவ்வாய்ப்பேட்டை சு: ம. கட்டிடத்தில் தோழர் எஸ். இராசமாணிக்கம் தலைமையில் நடந்த திராவிடர் கழகக் கூட்டத்தில் 1946ம் ஆண்டிற்குத் தோழர் டாக்டர் பி. எஸ். துரைசாமியைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:

24-1-46 இரவு 7-மணிக்கு அகளங்கநல்லூரில் தோழர் பி. கண்ணையன் தலைமையில் நடந்த கூட்டத்தில். தோழர் பி. கண்ணையனைத் தலைவராகவும், எம். தங்கையனைச் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் நிறுவப்பட்டது.

25-1-46ல் போரூராணித் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் வி. எஸ். குழந்தை, அவர்களின் தலைமையில நடந்தகூட்டத்தில், கழக ஆண்டுவிழாவை பிப்ரவரி 2-வது வாரத்தில், நடத்துவதென்றும். கவிஞர் பாரதிதாசன், சி.என். அண்ணாதுரை முதலியவர்களை அழைப்பதென்றும், கழக கட்டிட நிதி சேர்ப்பதற்குத் தோழர்கள் வி. எஸ். குழந்தை, பி. வடிவேலு இருவரையும் அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

o o

20-1-46ல் தாராசரம் திராவிடர் கழக இரண்டாவதாண்டு விழா தோழர் டி. பி. வேதாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னத்தம்பி, வீரமணி, திராவிடமணி மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். இரவு தோழர் வி. சின்னத்தம்பி தலைமையில் "இராமாயணத்தீர்ப்பு" என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

o o

16-1-46ல் மன்னார்குடி தி. சௌத் இந்தியன் நடனகலா பார்ட்டியாரின் தலைவர் தோழர் ஆர். இராசகோபாலன் அவர்கட்கு தஞ்சை நகர திராவிடர் கழகத்தின் சார்பில் ஒரு வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது. தோழர் அருளானந்தசாமி நாடார் விழாவிற்குத் தலைமை வகித்தார்...

o o

27-1-46ல் சென்னை எழும்பூர் சாமி ரெட்டித்தெருவிலுள்ள பார்க்கில் மாலை 5 மணிக்கு புரசைத் திராவிடர் கழகத்தாரால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் பு. செல்வராஜ் தலைமையில் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

23-1-46ல் சிவகங்கையில் நிகழ்ந்த திராவிடர் கழக ஆண்டுவிழாவில் 1946ம் ஆண்டுக்குத் தோழர் எ. எஸ். எம். மகாலிங்கம் தலைவராகவும், இராம. சுப்பிரமண்யம் பொருளாளராகவும், க. இராஜசேகரன் செயலாளராகவும் மற்றும் பலரை உறுப்பினர்களாகவும் கொண்ட அலுவற்குழு அமைக்கப்பட்டது. தோழர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேரால் ஓர் நூல் நிலையமும், சிவகங்கைத் தாலூகாவில் மட்டும் 3000 உறுப்பினர்கள் சேர்ப்பதென்றும், 50 கறுப்புச்சட்டைப் படையினரைப் பழக்குவிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டன.

o o

27-1-46 ஞாயிறு மாலை 6மணிக்கு மன்னார்குடி திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் சரவணன் பி. எ., தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்திரம் இளஞ்சேரன், அரங்கண்ணல், கே. ஆர். ஜி பால் ஆகியோர் "திராவிடர் நிலை" என்பதுபற்றிப் பேசினர்.

o o

26-1-46ல் திட்டக்குடி திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் சி. முனிசாமி தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. எ., ஓர் அரிய அறிவுரை நிகழ்த்தினார். மற்றும் புலவர்கள், நன்னன், முத்தழகன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். மாலையில் ஒரு மாபெரும் கறுப்புச்சட்டைப் படை ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்களின் வழியாகச்சென்று கூட்டம் நடக்கும் இடத்தை அடைந்தது.

---

## அனுதாபம்

கோபி திராவிடர் கழக சிறப்புக் கூட்டத்தில்20-1-46ல் அண்மையில் கோவை திராவிடர் கழகத் தலைவர் தோழர் எ. கிருஷ்ணசாமி செட்டியார் பி. எ., மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது.

o o

நன்னிமங்கலம் தோழர் எம். வையாபுரி அவர்கள் 20-1-46ல் இயற்கை யெய்தியமைக்கு உள்ளூர் திராவிடர் கழகத்தார் தமது அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

o o

தோழர் முனுசாமி கவுண்டரின் முன்னவர் பினாங்கு சென்று இறந்தமை முன்னிட்டு 14-12-45ல் நீத்தார்கடன் புரோகிதமின்றி நடந்தது. அன்று மாலை தோழர் கு. மன்னார் கவுண்டர் தலைமையில் நடைபெற்றது.

o o

ராயந்தூர் கிராமத்தில் தோழர் மு. இரத்தினசாமி தென்கொண்டார் மறைவு குறித்து 22-12-45ல் புலவர் வி. அ. அரங்கசாமி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஆர். சுப்பண்ணா பேசினார்.

o o

கொழும்புத் தோழர் பெரியசாமியின் மனைவி தோழியர் கிருஷ்ணவேணி அவர்கள் மறைவிற்கு அன்னார் சுற்றத்தார்களுக்கு வருத்தந் தெரிவித்து அதன் நினைவாக குடி அரசுக்குத் தோழர் ஈ. சின்னசொடலைமுத்து அவர்கள் ரூ. 1. நன்கொடையனுப்புயுள்ளார்.

o o

இராமநாதபுரம், விசாலயங்கோட்டை, சி. ச. மலையய்யா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் விசாலாட்சியம்மாள் 5-1-46ந் தேதி தன் 19ஆம் வயதில் அகாலமரணமடைந்துவிட்டாரென்பதைக் கேட்டு நாரெலியாத் தோழர் கே. எஸ். பெரியசாமி தன் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறார்.

---

1-1-46ல் சென்னைத் தோழர் டி. எ. நாராயணன் என்பார் தமது பெயரை எஸ். டி. ராவணன் என மாற்றியுள்ளார். 'குடி அரசு'க்கு நன்கொடை ரூ. 1 அனுப்பியுள்ளார்:

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.